**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2188/ஆ5/2023, நாள்.12.09.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளி மன்ற செயல்பாடுகள் – சிறார் திரைப்படம் திரையிடுதல் – செப்டம்பர் 2023–2024 – அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9–ம் வகுப்பு மாணவர்களுக்கு சிறார் திரைப்படம் திரையிடுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள். 19.05.2023
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம் /இ1/2023, நாள். 19.07.2023, 09.08.2023 மற்றும் 11.09.2023

.....

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி 2023–2024ம் கல்வியாண்டில் அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்களுக்கு ஜூலை 2023 மற்றும் ஆகஸ்ட் 2023 ஆகிய மாதங்களில் தி எக்ஸ்ரா டெரஸ்ட்ரியல் மற்றும் நிலா ஆகிய சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டது. மாணவர்கள் தங்களை சுற்றியுள்ள உல கத்தை புரிந்துகொள்ளவும் , பல்வேறு கலாசாரங்களின் தனித்தன்மையினை அறியவும் , நம்பிக்கை, இரக்கம், நட்பு, குழுபங்கேற்பு போன்ற நற்பண்புகளை அடையாளம் காணவும், மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் விமர்சன சிந்தனையினை வெளிக்கொணர்வதும் திரைப்படங்கள் திரையி டலின் நோக்கமாகும்.

2023–2024 ம் கல்வியாண்டில் அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்கள் கண்டுணரும் வகையில் , செப்டம்பர் – 2023ஆம் மாதத்திற்கு திரையிடப்படவுள்ள திரைப்படம் **"ஹருண் – அருண்"** என்கின்ற குஜராத்தி திரைப்படம் (வசனங்கள் அனைத்தும் தமிழ் துணையுரையுடன்) பள்ளிகளில் திரையிடுதல் சார்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பார்வை 2–ல் காணும் 11.09.2023 நாளிட்ட தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து அரசு நடுநிலை , உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம். (இப்பொருள் சார்பாக தனி கவனம் செலுத்தி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
4. உதவி திட்ட அலுவலர், வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)